- சுருக்கல் பயிற்சிக்கு கதைகள் முதலியனவற்றிலிருந்து வாக்கியங்களைத் தேர்ந்தெடுக்கலாம், இதனூடாக தேவையற்ற எல்லா உறுப்புகளும் தவிர்க்கப்படுகின்றன.
- சிறிய வாக்கியங்களை மட்டுமே உள்ள ஒரு முழுமையான எழுத்துருவை உருவாக்க விரித்தற் பயிற்சியினை பயன்படுத்தலாம். செயற்பாடு: எழுத்துருவின் நீளத்தைக் குறைந்தது மூலத்தின் நீளத்தைவிட இரண்டு மடங்காகப் பெருக்க வேண்டும்.

---

## 2. வாக்கியங்களை இணைக்கவும் சுருக்கவும் பயிற்சிகள்

3 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
சிறிய வாக்கியங்களுடன் முன்னேற்பாடாகச் செய்த கையேடுகள்

வாக்கியங்களை இணைக்கும், வேறு வேறாக்கும் பயிற்சிகள் தொடரியல், நடையியல், மொழித்திறமை தொடர்பாக மாணவர்களின் மொழித் தகைமையினை மேலும் கூட்டுகின்றன. விளங்கிக்கொள்ளலையும் வலுப்படுத்தலையும் மேலும் கூட்டுதற்கு இப் பயிற்சிகள் மீண்டும் மீண்டும் நடத்தப்பட வேண்டும். சொற்கூறுகளான "இணைப்பு/சொற்களைப் புணர்த்தல்" அல்லது "துணை உட்பிரிவுகள்" இவ்வேளையில் அறிமுகம் செய்ய வேண்டியதில்லை, ஏனெனில், செய்முறைப் பயன்படுத்தலே இன்றியமையாதது.

மாற்றுகள்:

ஆசிரியர் பல சிறிய இணைவாக்கியங்கள் உள்ள ஒரு தாள் துண்டினைப் பகிர்கிறார். எடுத்துக்காட்டு: "எனக்குப் பசிக்கிறது. ஏதாவது உண்ண விரும்புகிறேன்", "எனக்குக் களைப்பாயுள்ளது. நான் நீண்ட நேரம் உறங்கவில்லை", "அவன் எனக்கு வாக்குறுதியளித்தான். என்னுடன் அவன் திரைப்படத்துக்கு வருவதாக.", "நான் குழம்பிவிட்டேன். உண்மையாக நீங்கள் இதை விளங்கிக்கொண்டீர்களா?", "நீங்கள் விரையவேண்டும். நீங்கள் ஓட்டத்தில் வெல்வீர்கள்.", "பிந்திவிட்டோம். நாம் நம்முடைய ஊர் வீட்டுக்கு வந்தோம்." ஒரு தொடக்க உரையாடலுக்குப் பின்னர், வாக்கியங்களை ஒன்றாக இணைக்கக்கூடிய இணைப்புகளை வகுப்பு திரட்டுகிறது, அவை: மற்றும், பின்னர், உம், ஏனெனில், அப்படியாயின், அது, முன்னர், நேரம், அதனால், பதிலாக, முதலியன. அடுத்து மாணவர்கள் பொருத்தமான இணைப்புகளுடன் வாக்கிய இணைகளை ஒன்றாகச் சேர்த்து எழுதிக்கொள்வர். விரிவாக்கம்: வகுப்பில் தாம் உருவாக்கிய நிரலிலுள்ள இணைப்புகளுடன் (சிவப்பு நிறத்தில் கீழ்க் கோடிடப்பட்டன) மாணவர்கள் தம்முடைய வாக்கியங்களை அமைப்பர். மாற்றாக: தனித்தனி மாணவர்கள் ஒருவருக்கொருவர் இணை வாக்கியங்களை எழுதி அவை பின்னர் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.
வாக்கியங்களைப் பிரித்து வேறாக்கல்: இப்பயிற்சியில், மாணவர்கள் நீண்ட வாக்கியங்களைப் பெறுகின்றனர், அவற்றை இரு தனி வாக்கியங்களாகப் பிரிக்கவேண்டும். எடுத்துக்காட்டு: "ஒரு வாய் கூட என்னால் விழுங்க முடியவில்லை, ஏனெனில் கீரை எனக்குப் பிடிக்காது".

---

## 3. தாள்கீற்றுகளோடு மேம்படுத்தப்பட்ட பயிற்சிகள்

3 - 6 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
ஒவ்வொரு மாணவனுக்கும்/ மாணவிக்கும் 3 – 4 தாள் கீற்றுகள்

பின்வரும் பயிற்சிச் செயற்பாடுகள் நடையின் வெவ்வேறு கூறுகளை செயல் சார்ந்த விரைவுக் கற்றலுடன் இணைக்கும்.

செயல்முறை:

அ) ஆசிரியர் ஒரு படத்தைக் காட்சிப்படுத்துகிறார். ஒவ்வொரு மாணவனும்/ மாணவியும் 3 – 4 தாள் கீற்றுகளைப் (A3 தாள் கிடைநிலையில் 4 – 5 கீற்றுகளாக வெட்டப்பட்டது) பெறுவான்/பெறுவாள், படத்தின் ஒரு கூறு பற்றி ஒவ்வொரு கீற்றிலும் ஒரு வாக்கியம் எழுதுவான்/எழுதுவாள்.

ஆ) பின்னர் தாள் கீற்றுகள் ஒருங்குசேர்க்கப்பட்டு முழுமையாக மாற்றி மாற்றிக் கலக்கப்படும். மாணவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிகின்றனர். ஒவ்வொரு குழுவும் 9 – 12 கீற்றுகளைப் பெறுகிறது. இக் கீற்றுகளுடன் படம் பற்றிய ஓர் எழுத்துருவினை அவர்கள் உருவாக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது தங்கள் எழுத்து நடை பற்றி அவர்கள் ஆழமாக ஈடுபடவேண்டும்: திரும்பத்திரும்பப் பயன்பட்ட வாக்கியங்களையும் வாக்கியத் தொடக்கங்களையும் சொற்கோவையையும் வெட்டி நீக்கல் அல்லது பதிலிடல். எழுத்துரு வளர்ச்சி மிகுந்த காப்பாகக் கருதப்படவேண்டும். தேவைப்படின், குழு மேலும் வெற்றுத் தாள் கீற்றுகளைப் பெற்று தம்முடைய எழுத்துரு நன்றாக அமைய வாக்கியங்களைச் சேர்ப்பர்.

III

இ) கீற்றுகள் எல்லாம் அவற்றின் நிறைவு ஒழுங்கில் ஒன்றாக ஒட்டப்பட்டபின், குழுக்கள் தம் எழுத்துருக்களை வகுப்புக்கு எடுத்துரைப்புச் செய்வர். வகுப்பின் ஏனையவர் உண்டாக்கிய எல்லா எழுத்துருக்களையும் விளக்குவர்.

## 4. உயர்தர எழுத்துரு வகைகளுடன் ஆய்வுப்பயிற்சி

5 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
மாற்றினைப் பொறுத்து
(வலம் பார்க்கவும்)

முழு எழுத்துருக்களையும் உள்ளடக்கியதாக கவர்ச்சியுள்ள அறிவாற்றலுள்ள பயிற்சிகள் பல்வேறு வடிவங்களில் அமையக்கூடியவை. எனினும் இவ்வகை ஆய்வுகள் முதல் மொழி மற்றும் அதன் நடையியல் முகப்புக்கூறுகள் என்பவற்றில் ஓரளவு நிலைப்பட்ட உணர்வு வேண்டப்படுகிறது. இத்தகு உணர்வு இல்லாத நிலையில் தேவையான தகவலும் வழிகாட்டலும் வேண்டப்படுகின்றன. பல்வகை எழுத்துருக்கள் (பாடல்கள், உண்மை எழுத்துருக்கள், தேவதைக் கதைகள், குறுஞ்செய்திகள், நகைச்சுவை, முதலியன) பற்றிய அறிவு தொடர்பாக இதே நிலையே வேண்டப்படுகிறது / உண்மையானதாகும்.

### நடையும் தொனியும், மாற்றுகள்:

- முறைசார்பிலும் தொனியிலும் பல்வகை நிலைகளில் பொருத்தமான ஒரு சிறிய எழுத்துருவின் வேறுபாடுகள். நிகழ்த்தக்கூடிய பணிகள்: "நண்பர் / உங்கள் பேரன் பேர்த்திமார் / உங்கள் பிறந்தநாட்டுத் தூதுவராலயத்திலிருந்து புத்தாண்டுப் பரிசாக நீங்கள் ஒரு நூலைப் பெற்றுள்ளீர்கள். பொருத்தமான முறைசார் நிலையில் அவர்களுக்கு ஒரு நன்றிக் குறிப்பு எழுதுக." (பேச்சுமொழி உள்ளிட்ட மிகு முறைசார் எழுத்துமாழி முதல் முறைசார் மொழிக்கேற்றபடி தொனி வேறுபடும்.)

- ஐந்து போக்குவரத்துக் குறியீடுகளைத் தெரிவுசெய்க (எ.கா. நில், ஒருவழிப்பாதை, திரும்பத் தடை முதலியன). அக் குறியீடுகள் உண்மையில் எவற்றை உணர்த்துகின்றன என்பதை எழுத்தில் புலப்படுத்துக (எ.கா. "நீங்கள் இங்கு நிறுத்தவேண்டும", "இங்கு, நீங்கள் ஒரு வழியில் மட்டுமே பயணிக்கலாம்", முதலியன.) இப்பொழுது இக்கூற்றுகளை வெவ்வேறு அளவையிலான முறைசார் / மதிப்புடை முறையில் வடிவமைக்குக. இது தொடர்பாக நீங்கள் பேச்சுமொழியையும் கொச்சை மொழியையும் பயன்படுத்தலாம். (தயவுசெய்து நிறுத்துவீர்களா? நன்றி! என்பது பின்வரும் மிகுந்த முறைசாரா முறைக்கு எதிரானது: "முட்டாளே வாகனத்தை நிறுத்து". இதற்கேற்ற வேடிக்கையான ஒரு சுவரொட்டி தயாரிக்குக!) (அளவு A3 அல்லது A4)

- செய்தித்தாள் சிறு கட்டுரை ஒன்றினை, ஒரு கவிதையை அல்லது வேறொரு வகையான ஒரு சுருக்க எழுத்துருவை எடுக்கவும். மூன்று அல்லது நான்கு பேர் உள்ள குழுக்களில், யார் எந்த நடையில் (எ.கா. பேச்சுமாழி, கொச்சைமொழி, நகைச்சுவை மொழி, நேர்த்தியான மொழி, "கடுமையான" மொழி) இந்த எழுத்துருவை மீள் எழுத்துருவாக்கம் செய்வார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். உங்கள் கருத்துப்பாங்குகளை எழுதி ஒருவர்க்கொருவர் படித்துக்காட்டவும்!

### எழுத்துரு வகைகள் பலவிதமானவை

- ஒரு சுருக்க எழுத்துருவை எடுக்கவும், எ.கா. ஒரு செய்தித்தாள் கட்டுரை. ஒரு வகுப்பாக அல்லது அதேநிலையான குழுவாக, பல்வகை எழுத்துருக்களை ஒரு கவிதையாக, உண்மை எழுத்துருவாக, ஒரு தேவதைக் கதையாக, ஒரு தந்திச் செய்தியாக, ஒரு குறுஞ்செய்தியாக, ஒரு நகைச்சுவையாக, ஒரு ஒலிப்பதிவாக அல்லது ஒரு பரபரப்பான அறிக்கையாக மாற்றுவது பற்றி எண்ணுக. யார் (தனியாக அல்லது இணைகளாக) எந்த எழுத்துரு வகையை ஆக்குவார் என்பது பற்றி முடிவுசெய்க. முடிவாக, பல்வகை எழுத்துருக் கருத்துப்பாங்குகளை கலந்துரையாடி ஒப்பிடுக.

- உங்கள் பிறந்த நாட்டோடு தொடர்பான தலைப்புகள் தொடர்பாக இதேமாதிரி முயற்சி செய்க. எடுத்துக்காட்டாக, புகழ்மிக்க ஒருவரின் வாழ்க்கைக் கதையிலிருந்து காட்சிகளை ஒரு வானொலி நாடகமாக மாற்றுக, அல்லது இயற்கை நிலக்காட்சி ஒன்றுபற்றி கவிதை எழுதுக, வரலாற்று நிகழ்வுகள் பற்றி ஒரு தந்திச்செய்தி அல்லது செய்தித்தாள் கட்டுரைகளைக் கண்டுபிடிக்குக.